Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 291 | உள்ளூர் - 20.10.2026 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 291 | வெளியூர் - 21.10.2026 | புதன்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**கர்ம வினைகள் 3 வகை: பரிகாரங்கள்?** | **ரயில்வேயில் 1688 காலியிடங்கள்!** | **‘கரப்பான் பூச்சி’ எதிராக ‘லால் ஹிட்’ கட்சி!** | **மதுரையில் அணிவகுத்து நின்ற பேருந்துகள்?**

# பிரதமர் மோடி, ஜனாதிபதி திரௌபதி முர்மு விஜயதசமி வாழ்த்து!



புதுடெல்லி, அக். 20–

பிரதமர் மோடி மற்றும் ஜனாதிபதி திரௌபதி முர்மு ஆகியோர் நாட்டு மக்களுக்கு விஜயதசமி வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

நவராத்திரி விழாவின் 9ஆம் நாளான நேற்று சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. தோழிகளும், கல்வியும் சிறக்க பூஜைகள் மேற்கொள்ள ப்பட்டன. இதைத்தொடர்ந்து நவராத்திரி விழாவின் 10ஆம் நாளான இன்று விஜயதசமி கொண்டாடப்படுகிறது. குழந்தைகள் கல்வி கற்றலை தொடங்க இத்தினம் உகந்ததாக நம்பப்படுகிறது.

இந்நிலையில் பிரதமர் மோடி மற்றும் ஜனாதிபதி திரௌபதி முர்மு ஆகியோர் நாட்டு மக்களுக்கு விஜயதசமி வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**மோடி வாழ்த்து**

இது தொடர்பாக பிரதமர் மோடி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளதாவது, “அனைவருக்கும் விஜயதசமி நல்வாழ்த்துக்கள். மகிழ்ச்சியும் நம்பிக்கையும் நிறைந்த இந்த வெற்றித் திருவிழா, அனைவரின் மனவுறுதிக்கும் புது வலிமையை அளிக்கட்டும்.

ஒவ்வொருவரின் வாழ்வும் மகிழ்ச்சி, செழிப்பு மற்றும் வெற்றியால் வளமடையட்டும் என்பதே எனது மனமார்ந்த விருப்பம்.” என தெரிவித்துள்ளார்.

**ஜனாதிபதி வாழ்த்து**

அதேநேரம் ஜனாதிபதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள எக்ஸ் பக்க பதிவில், “விஜயதசமி திரு நாளானது தீமைக்கு எதிரான நன்மையின் வெற்றியையும், அதர்மத்திற்கு எதிரான தர்மத்தின் வெற்றியையும் பறைசாற்றுகிறது. ஒழுக்கம் மற்றும் நன்னடத்தையின் வடிவ மாக விளங்கும் நற்பண்புகளின் நாயகர் ஸ்ரீராமரின் உன்னத வழிகளைப் பின்பற்றி வாழ இத்திருநாள் ஊக்கமளிக்கிறது. நமது கலாச்சார பாரம்பரியத்தின் உன்னத விழுமியங்களைக் கடைப்பிடித்து, அனைவரும் உள்ளடக்கிய ஒரு சமூகம் மற்றும் வளர்ந்த பாரதத்தை உருவாக்க மக்கள் பங்களிக்க வேண்டும்” என்று அழைப்பு விடுத்துள்ளார்.

# அண்ணன் சீர்: முக்கிய அப்டேட்!



சென்னை, அக். 20–

தமிழக அரசின் அண்ணன் சீர் திட்டத்தில் பயன்பெற தகுதியுள்ள மணப்பெண்கள் ஆதார் எண்ணைச் சமர்ப்பிக்க வேண்டும். ஆதார் அட்டை இல்லாதவர்கள் உடனடியாக அதற்கு விண்ணப்பித்து, அட்டை கிடைக்கும் வரை மாற்று ஆவணங்களை அளிக்கலாம் என அரசு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ், ஆண்டுக்கு ரூ.2.5 லட்சத்துக்குள் வருமானம் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த தகுதியான மணப்பெண்களுக்கு திருமணத்தின்போது 22 கேரட் தங்க நாணயமும் பட்டுப்புடவையும் வழங்கப்பட உள்ளன. திட்டத்தைச் செயல்படுத்த நடப்பு நிதியாண்டின் முதற்கட்டமாக ரூ.812 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் முறை, முழுத் தகுதி விவரங்கள் மற்றும் தேவையான ஆவணங்கள் குறித்து அரசு விரைவில் தனியாக அறிவிக்கும். எனவே, தகுதியுள்ளவர்கள் ஆதார் விவரங்களைச் சரிபார்த்து தயாராக வைத்திருப்பது நல்லது.

# மதுரையில் அணிவகுத்து நின்ற பேருந்துகள்?




மதுரை, அக். 20–

மதுரை மாநகரில் இயங்கும் அரசுப் போக்குவரத்து கழகத்தின் சுற்றுச்சூழல் நட்பு CNG (Compressed Natural Gas) பேருந்துகளுக்கு எரிபொருள் நிரப்பும் முதன்மை நிலையத்தில் ஏற்பட்ட திடீர் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, எரிபொருள் நிரப்ப வந்த ஏராளமான பேருந்துகள் வீதியின் இருபுறமும் நீண்ட வரிசையில் அணிவகுத்து நின்றன.

**முக்கிய விவரங்கள்:**

தொழில்நுட்பக் கோளாறு: மதுரையில் உள்ள சி.என்.ஜி. (CNG) எரிபொருள் விநியோக மையத்தின் அழுத்தக் கட்டுப்பாட்டு இயந்திரத்தில் (Pressure Compressor) திடீரென இயந்திரக் கோளாறு ஏற்பட்டது.

நீண்ட வரிசையில் பேருந்துகள்: காலை நேரத்து வழக்கமான எரிபொருள் நிரப்பும் பணிக்காக வந்த 50–க்கும் மேற்பட்ட அரசுப் பேருந்துகள் நிலையத்தின் வெளியே பல மணி நேரம் காத்திருக்க நேரிட்டது.

போக்குவரத்து நெரிசல்: சாலையோரம் வரிசையாகப் பேருந்துகள் நிறுத்தப்பட்டதால் அப்பகுதியில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. உடனடியாகச் சம்பவ இடத்திற்கு வந்த போக்குவரத்து காவல் துறையினர் நிலையைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

## தமிழகத்தின் கடன் 21% குறைவு: அதிகம் கடன் வாங்கும் மாநிலங்களில் 5-வது இடம்!




சென்னை, அக். 20–

நடப்பு நிதியாண்டின் (2026– 27)முதல் பாதியில் தமிழகத்தின் கடன் ₹51,300 கோடியிலிருந்து ₹40,500 கோடியாகக் குறை ந்தது. இதனால், அதிகம் கடன் வாங்கும் மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் 2–வது இடத்திலிருந்து 5–வது இடத்துக்குச் சரிந்தது. அக்டோபர்டிசம்பர் காலாண்டில் ₹48,000 கோடி கடன் வாங்க அரசு திட்டமிட்டுள்ளதாகத் தகவல்.

# ‘கோவில் நிலம் இறைவனுக்கே’ உச்சநீதிமன்றம்!




சென்னை, அக். 20–

ஈரோடு மாவட்டம் கொடுமுடி நாகபாளையம் மாரியம்மன், பொன்னாச்சியம்மன் கோவிலுக்குச் சொந்தமான 1 ஏக்கர் 10 சென்ட் ‘இனாம்’ நிலத்தை, தற்காலிக அறங்காவலர் ஒருவர் 2017ம் ஆண்டு தாலுகா அலுவலகம் கட்டுவதற்காகத் தமிழக அரசுக்குத் தானமாக வழங்கினார். இதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. நீதிபதிகள் நரசிம்மா, அலோக் ஆராதே விசாரித்தனர். அவர்கள் பிறப்பித்த உத்தரவு:

* கோவில் சொத்துகள் இறைவனுக்கு உரியவை, அவற்றை அரசு கையகப்படுத்த முடியாது.
* கோவில் சொத்துகள் தொடர்பான ஒவ்வொரு முடிவும் அந்த அறக்கட்டளையின் நலனை மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டும்; அரசின் நிர்வாக வசதிக்காக எடுக்கப்படக் கூடாது.
* பாதுகாவலராகச் செயல்படும் அரசு, தான் பாதுகாக்க வேண்டிய மத அல்லது அறக்கட்டளை நிறுவனங்களின் சொத்துகளை அபகரிக்க கூடாது. அதிகாரிகளையும் அபகரிக்க அனுமதிக்க கூடாது.
* கோவில் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் அரசுக்கு இருக்கிறது; கோவில் சொத்துக்களின் உரிமையாளராக அரசு மாறிவிட முடியாது. * மத அல்லது அறக்கட்டளை நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துகளை நிர்வகிக்கும்போது, அவற்றைச் பாதுகாக்க வேண்டிய கடமை உள்ளது; அவற்றை விருப்பப்படி தாரைவார்க்கும் அதிகாரம் யாருக்கும் கிடையாது.
* அறங்காவலர் பொறுப்பில் இருப்பவர் தன்னிச்சையாக கோவில் சொத்துகளை மற்றவர்களுக்கு வழங்க முடியாது.
* பல நூற்றாண்டுகளாக பக்தர்கள் வழங்கிய காணிக்கைகள், ஆட்சியாளர்கள், மக்கள் அளித்த நன்கொடை நிலங்கள், கட்டடங்கள், நகைகள் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவை; அவை எப்பொழுதுமே அப்படியே இருக்கும் என்ற நம்பிக்கையிலேயே வழங்கப்பட்டன.
* நன்கொடை வழங்கியது, அதை அளித்தவருக்கோ, பூசாரிக்கோ, அறங்காவலருக்கோ அல்லது அரசுக்கோ சொந்தமானதாக இருக்காது; அது இறைவனுக்குச் சொந்தமானதாகிவிடும்.
* சட்டப்படி நடவடிக்கைகளை பின்பற்றுமாறு அரசு அதிகாரிகளுக்கும், ஹிந்து சமய அறநிலையத் துறைக்கும் சுப்ரீம்கோர்ட் உத்தரவிட்டது. ஹிந்து மத நிறுவனங்கள் மீது அரசு கொண்டுள்ள கட்டுப்பாடு குறித்த விவாதங்களுக்கு மத்தியில் இந்தத் தீர்ப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

# சீனா செக்! இந்தியாவுக்கு ஷாக்!

# சுரங்க இயந்திர ஏற்றுமதிக்குக் கட்டுப்பாடு! மெட்ரோ திட்டங்களுக்கு முட்டுக்கட்டை?

## மத்திய அரசு அடுத்த அதிரடி?




புதுடெல்லி, அக். 20–

இந்தியாவின் உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு முக்கியமாகத் தேவைப்படும் சுரங்கம் தோண்டும் இயந்திரங்களின் ஏற்றுமதிக்கு சீனா புதிய கட்டுப்பாடுகளை அறிவித்துள்ளது. இந்த நடவடிக்கை இந்தியாவின் மெட்ரோ ரயில், ரயில்வே மற்றும் சுரங்கப்பாதை கட்டுமானப் பணிகளில் தாக்கத்தை ஏற்படு த்தக்கூடும் என அச்சம் எழுந்துள்ளது.

**நவம்பர் 18 முதல் புதிய கட்டுப்பாடு**

சீனாவின் வணிக அமைச்சகம் குறிப்பிட்ட வகையிலான சுரங்கம் தோண்டும் இயந்திரங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய உபகரணங்களின் ஏற்றுமதிக்கு புதிய கட்டுப்பாடுகளை அறிவித்துள்ளது. நவம்பர் 18, 2026 முதல் நடைமுறைக்கு வரும் இந்த விதிகளின்படி, சம்பந்தப்பட்ட உபகரணங்களை ஏற்றுமதி செய்ய உரிய உரிமம் பெற வேண்டும். தேசிய பாதுகாப்பு மற்றும் தேசிய நலன்களைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகச் சீனா தெரிவித்துள்ளது.

இந்தியாவில் பல்வேறு நகரங்களில் மெட்ரோ ரயில் பாதைகள், ரயில்வே சுரங்கங்கள் மற்றும் பிற நிலத்தடி உள்கட்டமைப்புத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. மண் மற்றும் கடினமான பாறைகளைத் துளைத்து சுரங்கப்பாதைகளை அமைக்க இந்த இயந்திரங்கள் இன்றியமையாதவை. இறக்குமதியில் பாதிப்பு ஏற்பட்டால், இயந்திரங்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டு கட்டுமானப் பணிகளின் கால அட்டவணை பாதிக்கப்படலாம்.

**உள்நாட்டு உற்பத்திக்கு முக்கியத்துவம்**

இந்தச் சவாலை எதிர்கொள்ள, சுரங்கம் தோண்டும் இயந்திரங்கள், தீயணைப்பு மற்றும் அகழ்வாராய்ச்சி உபகரணங்களின் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்க 1.2 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான திட்டத்தை மத்திய அரசு உருவாக்கி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது. ராய்ட்டர்ஸ் செய்தியின்படி, இந்தத் திட்டம் அடுத்த ஏழு ஆண்டுகளில் சுமார் 1.8 பில்லியன் டாலர் முதலீட்டை ஈர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் வெற்றி, உற்பத்தித் திறன், தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் செயல்படுத்தும் முறையைப் பொறுத்தே அமையும்.

# ‘கரப்பான் பூச்சி’ எதிராக ‘லால் ஹிட்’ கட்சி!




இந்திய அரசியலில் சமீபகாலமாகத் தீவிரப் போராட்டங்களை நடத்தி வரும் ‘காக்ரோச் ஜனதா கட்சி’ (Cockroach Janata Party – CJP / கரப்பான் பூச்சி கட்சி) என்ற அமைப்பின் செயல்பாடுகளுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், டெல்லியில் ‘லால் ஹிட் கட்சி’ (Lal Hit Party) எனும் புதிய அரசியல் அமைப்பு உதயமாகியுள்ளது.

**முக்கிய நிகழ்வுகள் மற்றும் விவரங்கள்:**

‘லால் ஹிட்’ பெயர் உருவான பின்னணி: வீடுகளில் தொல்லை தரும் கரப்பான் பூச்சிகளை ஒழிப்பதற்குச் சிவப்பு மற்றும் கருப்பு நிறங்களில் ‘ஹிட்’ (Lal Hit) பூச்சிக்கொல்லி மருந்து பயன்படுத்தப்படுவது வழக்கம். கரப்பான் பூச்சியை அடையாளமாகக் கொண்டு இயங்கும் CJP அமைப்பை அரசியல் ரீதியாக முடக்கவே இந்த அமைப்புக்கு ‘லால் ஹிட் கட்சி’ என்று பெயரிடப்பட்டுள்ளது. (ஹிந்தியில் ‘லால்’ என்றால் சிவப்பு என்று பொருள்).

லால் ஹிட் கட்சியின் நோக்கம்:

டெல்லியைச் சேர்ந்த சமூகச் செயற்பாட்டாளர் அயன் பட்நாகர் என்பவரின் ஒருங்கிணைப்பில் இந்த அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது.

இந்த கட்சி தேர்தலில் போட்டியிடுவதற்காக உருவாக்கப்படவில்லை என்றும், நாட்டின் அரசியலமைப்பு நிறுவனங்கள் மற்றும் நாட்டின் தலைவர்கள் மீது அவதூறு பரப்பும் CJP போன்ற அமைப்புகளின் போராட்டங்களை எதிர்ப்பதே இதன் முதன்மை நோக்கம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பின்னணி: என்ன காரணம்?**

1. கரப்பான் பூச்சி கட்சியின் போராட்டங்கள்: நீட் (NEET) முறைகேடுகள் மற்றும் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணி (SIR) போன்ற விவகாரங்களில் தலைமைத் தேர்தல் ஆணையருக்கு எதிராகக் ‘காக்ரோச் ஜனதா கட்சி’ டெல்லி, பெங்களூரு போன்ற நகரங்களில் தொடர் போராட்டங்களை நடத்தி வந்தது.

2. எதிர்ப்பும் சர்ச்சைகளும்: இவர்களின் இத்தகைய போராட்டங்கள் நாட்டின் ஜனநாயக அமைப்புகளைப் பலவீனப்படுத்துவதாகக் குற்றம்சாட்டி, டெல்லியின் ஜன்பத் பகுதியில் ‘லால் ஹிட்’ அமைப்பினர் கரப்பான் பூச்சி கட்சிக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

3. சமீபத்திய நிகழ்வுகள்: டெல்லியில் நடைபெற்ற ராம்லீலா நிகழ்வுகளின் போது கூட, அசுத்தத்தின் அடையாளமாக 30 அடி உயரக் கரப்பான் பூச்சியின் உருவப்பொம்மை எரிக்கப்பட்ட சம்பவங்கள் இந்த அரசியல் களம் தீவிரமடைந்து வருவதை சுட்டிக்காட்டுகின்றன.

தலையங்கம்
மதுரை மணி
செவ்வாய்க்கிழமை 20.10.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஐப்பசி மாதம் 03-ம் தேதி

# தங்கத்தில் இந்தியா புதிய பாய்ச்சல்!



இந்தியா ஆண்டுக்கு 1,200 டன் தங்கத்தைச் சுத்திகரிக்கும் திறனைப் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. உள்நாட்டுத் தேவை 800 முதல் 850 டன். உற்பத்தித் திறனுக்கும் நுகர்வுக்கும் இடையிலான இந்த வேறுபாடு, ஏற்றுமதிக்கான வாய்ப்பைத் திறக்கிறது.

குஜராத் கிப்ட் சிட்டி வழியாக அறிவிக்கப்பட்டுள்ள புதிய வர்த்தக நெறிமுறைகள், இந்தியாவைச் சர்வதேசத் தங்க வர்த்தக மையமாக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளன. திட்டம் காகிதத்தில் நம்பிக்கையளிக்கிறது. அதன் வெற்றியைத் தீர்மானிப்பது நடைமுறை. உலகச் சந்தை நம்புவது தரத்தையும் வெளிப்படைத்தன்மையையும். தங்கத்தின் மூலத்தைக் கண்காணித்தல், தரச் சான்றிதழ், சீரான வர்த்தக விதிகள், விரைவான சுங்க நடைமுறைகள் ஆகியவை உறுதியாக வேண்டும். இல்லையெனில், 1,200 டன் சுத்திகரிப்புத் திறன் என்பது பெருமைக்குரிய எண்ணிக்கையாகவே நின்றுவிடும்.

உபரி தங்கத்தை ஏற்றுமதி செய்வது வருவாயையும் வேலை வாய்ப்பையும் உருவாக்கலாம். ஆனால் அந்த வாய்ப்பு சில நிறுவனங்களுக்குள் மட்டும் சுருங்காமல், நாட்டின் பொருளாதாரத்துக்கு பயன் தர வேண்டும். இந்தியா தங்கத்தைச் சுத்திகரிக்கும் நாடாக இருப்பதிலிருந்து, தங்க வர்த்தகத்தின் விதிகளை நிர்ணயிக்கும் நாடாக உயருமா? பதில் அறிவிப்புகளில் இல்லை; அமலாக்கத்தில்தான் உள்ளது.

**மதுரை மணி**
**ஆசிரியர்**



## சினிமா துளிகள்..!

# சினிமா செய்திகள்!




**தமிழ்:** ரஜினிகாந்தின் ஜெயிலர் 2 நான்கு நாட்களில் உலகளவில் ₹424.25 கோடி வசூலித்துள்ளதாகத் தகவல். 2026–ஆம் ஆண்டின் அதிக வசூல் செய்த தமிழ்ப் படமாகவும் இது உயர்ந்துள்ளது.

**கேரளம்:** அனூப் மேனன் நடித்த Chiram அக்டோபர் 18–ஆம் தேதி வெளியானது. Udumbanchola Vision அக்டோபர் 21–ஆம் தேதியும், ஜெயசூர்யாவின் Titans அக்டோபர் 22–ஆம் தேதியும் வெளியாகத் திட்டமிடப்பட்டுள்ளன.

**இந்தி:** மும்பை ஜூஹூவில் நடிகர் டைகர் ஷெராஃப் பயணித்த காரை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும், ஓட்டுநர் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.சம்பவம் தொடர்பாக விசாரணை நடைபெறுகிறது.

**ஹாலிவுட்:** Street Fighter வட அமெரிக்க வார இறுதி வசூலில் முதலிடம் பிடித்து, அங்கு சுமார் 31 மில்லியன் டாலரும் உலகளவில் 51 மில்லியன் டாலரும் ஈட்டியதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

**ஆந்திரா / தெலுங்கு:** விஜய் தேவரகொண்டாரஷ்மிகா மந்தனா நடித்த Ranabaali, வெளியான மூன்றாம் நாளில் ₹24 கோடியைக் கடந்ததாக கூறப்படுகிறது

# அரபிக்கடலில் வலுப்பெற்ற புயல் சின்னம்!



சென்னை, அக். 20–

தென்மேற்கு அரபிக்கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி அதே பகுதியில் நிலைகொண்டுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அரபிக்கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி வலுப்பெற்ற ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக, அதே பகுதியில் நிலைகொண்டுள்ளது.

அடுத்த 12 மணி நேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியானது மேற்கு–வடமேற்கு திசையில் நகரக்கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புயல் சின்னம் (அக். 21) காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக வலுவிழந்து, அக். 22–ல் சோமாலியா கடற்கரை நோக்கி நகரும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த வாரத்தில் தமிழகத்தையொட்டிய தென்கிழக்கு வங்கக் கடலில் புதிய காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக முன்னதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இரு புயல் சின்னங்கள் காரணமாக, தென்மேற்கு அரபிக் கடலில் இருந்து கேரளம், தமிழகம் வழியாக தென்கிழக்கு வங்கக் கடல் வரை வளிமண்டலத் தாழ்வுப் பாதை நிலவ வாய்ப்புள்ளது.

இதனிடையே, இந்த வானிலை சூழல்கள் காரணமாக தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அடுத்த இரு வாரங்களுக்கு பலத்த மழை வாய்ப்புள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

# உலகின் முக்கிய நாடுகளில் ஜென் ஸீக்கள் போராட்டம்!




புதுடெல்லி, அக். 20–

இந்தியா உள்பட உலகின் முக்கிய நாடுகளில் ஜென் ஸீ தலைமுறையினர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

சமீபத்தில் இந்தியா உள்பட உலகின் முக்கிய நாடுகளில் பல்வேறு பிரச்னைகள் தொடர்பாக இளம் தலைமுறையினர் போராட்டம் நடத்தி வருவதால், அந்தந்த நாடுகளில் அசாதாரண நிலைமை நிலவி வருகிறது.

இந்தியாவில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தத்தில் முறைகேடு நடந்ததாக தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வலியுறுத்தி, கரப்பான் பூச்சி ஜனதா கட்சி தலைமையில் அரசுக்கு எதிராக இளம் தலைமுறையினர் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

பிரான்ஸ் நாட்டில் பள்ளிகளில் போதிய உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாதது தொடர்பாக இளம் தலைமுறையினர் போராட்டம் நடத்திய நிலையில், தற்போது விலைவாசி உயர்வு, பணவீக்கம், அந்நாட்டு அரசின் சிக்கன கொள்கைகளுக்கு எதிராக மக்களும் தொழிற்சங்கங்களும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அரசுக்கு எதிராக சுமார் 5.5 லட்சம் பேர் போராட்டத்தில் ஈடுபட்டதாக அந்நாட்டு அரசு கூறும்நிலையில், 8 லட்சத்துக்கும் அதிகமானோர் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதாக தொழிற்சங்கள் கூறுகின்றன.

இதேபோல், ஸ்பெயின் நாட்டிலும் பண வீக்கம், அத்தியாவசிய பொருள்கள் விலை உயர்வால் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதுமட்டுமின்றி, ஸ்பெயின் நாட்டில் வருகிற நவம்பர் 29–ல் நாடாளுமன்ற தேர்தல் நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஜெர்மனி நாட்டில் இனவெறி, தீவிர வலதுசாரி அரசியல், ஜனநாயக உரிமை உள்ளிட்ட பிரச்னைகளை முன்வைத்து நாட்டின் பல்வேறு நகரங்களில் மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

சிலி நாட்டில் கல்வித் துறையில் நிதி ஒதுக்கீடு தொடர்பாக அரசுக்கு எதிராக மாணவர்கள் போராட்டம் நடத்துகின்றனர்.

அல்பேனியா நாட்டில் வேலைவாய்ப்பின்மை, கல்விக்கான செலவு அதிகரிப்பு, அரசுத் துறைகளில் ஊழல் உள்ளிட்ட காரணிகளால் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

# பல்லவன் இல்லத்தில் புதிய தலைமைச் செயலகம் அமைகிறதா?



சென்னை, அக். 20–

சென்னை பல்லவன் இல்லத்தில் புதிய தலைமைச் செயலகம் அமைக்க திட்டமிடப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போது மாநகரப் போக்குவரத்துக் கழகம் செயல்பட்டு வரும் பல்லவன் இல்லம், 13.22 ஏக்கர் பரப்பளவு கொண்டது. புதிய தலைமைச் செயலகத்துக்கான போதுமான இடமாக இருப்பதால், கூடுதலாகக் கையகப்படுத்தும் தேவை இருக்காது. மேலும், பல்லவன் இல்லத்துக்கு பேருந்து, புறநகர் ரயில், மெட்ரோ ரயில் சேவைகளும் இருப்பதால் ஊழியர்களுக்கு எளிதாக இருக்கும் எனக் கூறப்படுகிறது.

அதுமட்டுமின்றி, தற்போது இங்கு செயல்பட்டு வரும் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தை சென்னை புறநகர் பேருந்து நிலையத்துக்கு (கோயம்பேடு) மாற்றப்படலாம்.

இருப்பினும், பல்லவன் இல்லத்தில் புதிய தலைமைச் செயலகம் அமைப்பது குறித்து பரிசீலனை மட்டுமே இருப்பதாகவும், இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்றும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

# பழனியில் குடும்ப சங்கமம் நிகழ்ச்சி!




பழனி, அக். 20–

பழனியில் கேரளா ஸ்ரீ நாராயண குரு சமாஜத்தின் குடும்ப சங்கமம் விழா நடைபெற்றது. இதற்கு தலைமை பொறுப்பாளர் கொடைக்கானல் அரிமா.ரவீந்திரன் தலைமை வகித்தார். மாநில தலைவர் செந்தாமரை, பழனி நகர செயலாளர் உன்னி கிருஷ்ணன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் சிறப்பு அழைப்பாளராக பழனி தொகுதி கே ரவி மனோகரன் எம்எல்ஏ பங்கேற்றார். அவருக்கு நினைவுபரிசு வழங்கப்பட்டது. தமிழகத்தில் வசிக்கும் ஈழவர் சமூகத்தினரை, இதர பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசுக்கு கோரிக்கை வைக்க முடிவு செய்யப்பட்டது. அதிமுக மாவட்ட இளைஞர் அணி செயலாளர் எஸ்பி அன்வர்தீன், தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பு லாட்ஜ் அசோசியேசன் நிர்வாகி ரம்யா கிருஷ்ணன், உள்பட ஏராளமானோர் பங்கேற்றனர். கலை நிகழ்ச்சிகளும் கலந்துரையாடல் நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

# தாராபுரம் நாம் தமிழர் வேட்பாளர் கார்த்திகா கைது!



தாராபுரம், அக். 20–

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் தவெக சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் சத்தியபாமாவை ஆதரித்து பிரசாரம் மேற்கொள்ள முதல்வர் விஜய் தாராபுரம் வந்திருந்தார். அதேசமயம், தாராபுரம், வீராச்சிமங்கலம் பிரிவு பகுதியில் நாம் தமிழர் கட்சியினர் பிரசாரம் மேற்கொள்ள சென்றனர். அதற்கு போலீஸார் அனுமதி மறுத்தனர்.

முதல்வர் விஜய் சாலை வலம் மேற்கொள்ள உள்ளதாகவும் இதனால் அந்தப் பகுதியில் அனுமதி வழங்கப்படாது எனவும் போலீஸார் கூறியிருந்தனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாதக வேட்பாளர் கார்த்திகா மற்றும் கட்சியினர் போலீஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். எங்கள் பிரசாரத்தை தடுக்கும் விதத்திலேயே போலீஸார் செயல்பட்டு வருவதாகவும் ஒருதலைபட்சமாக போலீஸார் செயல்படுவதாகவும் கூறி, அப்பகுதியில் நாம் தமிழர் கட்சியினர் சாலை மறியலில் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் இருதரப்பினரிடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

தாராபுரம் நாதக வேட்பாளாரான கார்த்திகா மீது தேர்தல் பிரசாரத்தில் காவல் நிலையத்தை முற்றுகையிட்டது, முதல்வர் சென்ற பாதையில் பிரசாரம் மேற்கொண்டது, முதல்வர் குறித்த அவதூறாகப் பேசியது என 3 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில், கோவையில் உள்ள கார்த்திகாவின் இல்லத்திற்குச் சென்ற தாராபுரம் காவல் துறையினர் அவரையும் அவரது கணவரையும் கைது செய்தனர்.

# தேவாவின் சகோதரர் மகன் கார்த்திக் சபேஷ் காலமானார்!



மறைந்த இசையமைப்பாளர் தேவாவின் சகோதரர் மகனும் நடிகருமான கார்த்திக் சபேஷ் திங்கள்கிழமை காலை உயிரிழந்தார். 37 வயதாகும் கார்த்திக் சபேஷ், குளிர் 100, வல்லவன், பட்டத்து யானை, உதயம் NH4 உள்ளிட்ட பல்வேறு படங்களில் துணை கதாபாத்திரங்களில் நடித்துள்ளார். சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் உடல்நலக் குறைவு காரணமாக கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக சிகிச்சைப் பெற்று வந்தார். கடந்த சில நாள்களாக கார்த்திக் சபேஷின் உடல்நிலை மிகவும் மோசமடைந்த நிலையில், தீவிர சிகிச்சைப் பிரிவில் மருத்துவக் குழுவினரால் கண்காணிக்கப்பட்டு வந்தார்.

இந்த நிலையில், சிகிச்சைப் பலனின்றி இன்று அதிகாலை அவர் உயிரிழந்ததாக குடும்பத்தினர் தெரிவித்து ள்ளனர். சென்னை வளசரவா க்கத்தில் 4.30 மணியளவில் இறுதிச் சடங்குகள் நடைபெறவுள்ளன. மறைந்த கார்த்திக் சபேஷுக்கு மனைவி ரம்யா கார்த்திக் மற்றும் இரு மகள்கள் பிரிஷானிதாரா, ஹைரானிதாரா ஆகியோர் உள்ளனர்.

கடந்த அக்டோபர் 17–ஆம் தேதி திடீர் உடல்நலக் குறைவு காரணமாக இசையமைப்பாளர் தேவா உயிரிழந்த நிலையில், அடுத்த இரண்டு நாள்களில் அவரது சகோதரர் மகன் உயிரிழந்துள்ளது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இசையமைப்பாளரும் தேவாவின் சகோதரருமான சபேஷ், கடந்தாண்டு அக்டோபர் மாதம் காலமானது குறிப்பிடத்தக்கது.



# கர்ம வினைகள் 3 வகை: பரிகாரங்கள்?



வாழ்க்கையில் தொடர்ந்து தடைகள் ஏற்பட்டால், சிலர் ஜோதிடரை அணுகி பரிகாரங்கள் செய்கின்றனர். ஆனால், பரிகாரம் செய்தும் பலன் கிடைக்காததற்குக் கர்ம வினைகள் காரணமாக இருக்கலாம் என்பது ஜோதிட நம்பிக்கை. கர்ம வினைகள் மூன்று வகைப்படும் என ஆன்மிகக் கட்டுரை ஒன்று விளக்குகிறது.

த்ருத கர்மா என்பது தெரிந்தே செய்த கடுமையான தவறுகளைக் குறிக்கிறது. இவற்றின் விளைவுகளை அனுபவிக்க வேண்டியிருக்கும் என்றும், ஏழைகளுக்கு அன்னதானம் செய்வது நன்மை தரும் என்றும் அந்தக் கட்டுரை கூறுகிறது.

த்ருத அத்ருத கர்மா என்பது தவறு செய்ததை உணர்ந்து மனம் வருந்தி மன்னிப்புக் கோருவதாகும். இதற்குத் தெய்வப் பரிகாரங்கள் நிவாரணம் அளிக்கலாம் என்பது ஜோதிடக் கருத்து.

அத்ருத கர்மா என்பது தெரியாமல் செய்த சிறிய தவறுகளைக் குறிக்கிறது. மனம் வருந்தி இறைவனை வேண்டுவது போதுமானது எனக் கட்டுரை குறிப்பிடுகிறது.

ஜாதகத்தில் குரு அல்லது ஒன்பதாம் பாவத்தின் தொடர்பைப் பொறுத்து கர்ம வினையை அறியலாம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை ஆன்மிக நம்பிக்கைகள்; அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டவை அல்ல.

# ஐடிபிஐ வங்கி விற்பனைக்கு ஊழியர்கள் எதிர்ப்பு!




புதுடெல்லி, அக். 20–

கனடாவின் ஃபேர்ஃபாக்ஸ் குழுமத்துக்கு ஐடிபிஐ வங்கியின் பெரும்பான்மைப் பங்குகளை விற்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதாகத் தகவல். இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள வங்கி ஊழியர்கள், அரசு பெரும்பான்மைப் பங்குகளைத் தக்கவைக்கவும், பணிநலன் மற்றும் ஓய்வூதியப் பலன்களுக்கு எழுத்துப்பூர்வ உத்தரவாதம் அளிக்கவும் கோரியுள்ளனர்.

கோரிக்கைகள் ஏற்கப்படாவிட்டால், நவம்பர் 2, 3 தேதிகளில் நாடு முழுவதும் அடையாள உண்ணாவிரதம் நடத்தப்படும் என அறிவித்துள்ளனர். போராட்ட நாட்களில் கிளைச் சேவைகள் பாதிக்கப்படலாம்; மற்ற நாட்களில் வங்கிச் சேவைகள் வழக்கம்போல் இருக்கும் என செய்தி கணிக்கப்பட்டுள்ளது.

# புதிய வேலைக்கு ₹15,000 ஊக்கம்!



புதுடெல்லி, அக். 20–

முதன்முறையாக EPFO–வில் சேரும் தகுதியான ஊழியர்களுக்கு, PM–VBRY திட்டத்தின் கீழ் அதிகபட்சம் ₹15,000 ஊக்கத்தொகை கிடைக்கலாம். மாத ஊதியம் ₹1 லட்சத்துக்குள் இருக்க வேண்டும்; வேலைவாய்ப்பு 2025 ஆகஸ்ட் 1 முதல் 2027 ஜூலை 31 வரை உருவாகியிருக்க வேண்டும்.

தொகை இரண்டு தவணைகளாக வழங்கப்படும்: முதல் தவணை ஆறு மாதத் தொடர்ச்சியான பணிக்குப் பிறகு; இரண்டாவது தவணை 12 மாதப் பணிக்குப் பிறகும் நிதி எழுத்தறிவுப் பயிற்சியை முடித்த பின்னரும் வழங்கப்படும். வேலையில் சேர்ந்த அனைவருக்கும் தானாகக் கிடைக்கும் தொகை அல்ல.

# முதல்வர் விஜய் குறித்து அவதூறு பேச்சு: திமுக பெண் கவுன்சிலர் உள்பட 2 பேர் மீது வழக்கு!



சென்னை, அக். 20–

சென்னையில் கடந்த அக். 7–ல் நடைபெற்ற திமுக கூட்டத்தில் தமிழக முதல்வர் விஜய் குறித்து அவதூறாக பேசியதாக திமுக பெண் கவுன்சிலர் சுதா தீனதயாளன் மீது தவெகவினர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். முதல்வர் குறித்து அநாகரிகமாக பேசியதாக திமுக கவுன்சிலர் சுதா தீனதயாளன் மீதும், நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த முரளிதரன் மீதும் பி–2 எஸ்பிளனேடு காவல் நிலையத்தில் தவெக நிர்வாகி உதயகுமார் புகார் அளித்தார். இதனைத் தொடர்ந்து, கவுன்சிலர் சுதா மற்றும் முரளிதரன் ஆகிய இருவரின் மீதும் காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது.




# பாட்டி காலத்து 10 வீட்டு வைத்தியங்கள்!



சிறிய உடல்நல அசௌகரியங்களுக்கு வீட்டில் பின்பற்றப்படும் சில பாரம்பரிய முறைகள்:

1. ஐஸ் ஒத்தடம்: துணியில் சுற்றிய ஐஸை முகத்தில் சிறிது நேரம் ஒத்தடம் கொடுத்தால் வீக்கம் தற்காலிகமாகக் குறையலாம்.
2. கிராம்பு: உணவுக்குப் பிறகு அளவோடு மென்று சாப்பிடுவது வாயைப் புத்துணர்ச்சியாக வைத்திருக்க உதவும்.
3. மூச்சுப் பயிற்சி: மெதுவாக மூச்சை உள்ளிழுத்து வெளியே விடுவது மன அழுத்தத்தைக் குறைக்க உதவும்.
4. யூகலிப்டஸ் வாசனை: சிலருக்கு புத்துணர்ச்சி அளிக்கலாம்; எண்ணெயை உட்கொள்ளவோ மூக்கில் விடவோ கூடாது.
5. தேன்: இருமல் மற்றும் தொண்டை எரிச்சலுக்கு நிவாரணம் தரலாம். ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வழங்க வேண்டாம்.
6. குளிர் ஒத்தடம்: தலைவலியின்போது நெற்றியில் குளிர்ந்த துணியை வைக்கலாம்.
7. பாத மசாஜ்: வெதுவெதுப்பான எண்ணெயால் பாதங்களை மெதுவாக மசாஜ் செய்வது ஓய்வுக்கு உதவலாம்.
8. எலுமிச்சை நீர்: சிலர் வயிற்று உப்புசத்திற்கு அருந்துவர்; உப்பு சேர்ப்பதில் கவனம் தேவை.
9. இஞ்சி: உணவில் சேர்த்துச் சாப்பிடுவது தொண்டை அசௌகரியத்திற்கு ஆறுதல் தரலாம்.
10. மஞ்சள் பால், சோம்பு: சிலருக்கு உணவுக்குப் பிந்தைய அசௌகரியத்தில் இதமாக இருக்கலாம்.

இவை மருத்துவச் சிகிச்சைக்கு மாற்றாகாது. அறிகுறிகள் தீவிரமானாலோ நீடித்தாலோ மருத்துவரை அணுகுங்கள்.

# ரயிலில் ஸ்பீக்கரில் செல்போனா? அபராதம், சிறை!



சென்னை, அக். 20–

ரயில் பயணங்களின்போதும், ரயில் நிலையங்களில் இருக்கும்போதும் செல்போன்கள் மூலம் உரத்த குரலில் பேசுவது, அதிக ஒலியுடன் இசை, உரையாடல்கள் கேட்பது, வீடியோக்கள் பார்ப்பது தற்போது அதிகரித்து வருகிறது. இது அருகில் இருக்கும் மற்ற பயணிகளுக்கு தொந்தரவாகவும், பயணத்தைச் சீர்குலைப்பதாக இருக்கும் என்பதால், இத்தகைய செயல்களுக்கு ரயில்வே திருத்தச் சட்டத்திற்கு இணங்க அபராதத்துடன் கூடிய தண்டனை விதிக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கடந்த 16 ஆம் தேதி தெற்கு ரயில்வே அனைத்து மண்டலங்களுக்கும் அறிவுறுத்தல் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. அதில், ரயில்களிலோ ரயில் நிலையங்களிலோ செல்போன்கள் மூலம் அதிக ஒலியுடன் ஆடியோ மற்றும் வீடியோக்களை பார்க்கக் கூடாது என பயணிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துமாறும், விதிகளை மீறுவோருக்கு ரயில்வே சட்டப் பிரிவு 145–இன் கீழ் ரூ.5,000 வரை அபராதமும், ஆறு மாதங்கள் வரை சிறைத்தண்டனையும் விதிக்கப்படலாம் என்றும் எச்சரித்துள்ளது.

இது குறித்து ரயில் நிலையங்கள், ரயில்களில் அறிவிப்புகள் வெளியிடப்படும். இந்த விழிப்புணர்வு வாசகம் இந்தி, ஆங்கிலம் மற்றும் உள்ளூர் மொழிகளில் இருக்கும். ஹெட்ஃபோன்களைப் பயன்படுத்துமாறும், உரத்த குரலில் பேசும் தொலைபேசி அழைப்புகளை தவிர்க்குமாறும் பயணிகள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

மேலும், சக பயணிகளுக்கு இடையூறு செய்வதைத் தவிர்க்க, தொலைபேசி உரையாடல்களை மிதமான ஒலியளவில் வைத்துக்கொள்ளுமாறும் மற்றும் ஆடியோ கேட்கும்போது அல்லது வீடியோக்களை பார்க்கும்போதும் இயர்போன்களைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ரயில் பயணத்தின்போது மற்ற பயணிகளுக்கு இடையூறு விளைவிப்பவர்களுக்கு ரூ.5,000 அபராதம் விதிக்கப்படும் என்றும், அவர்கள் ரயிலிலிருந்தோ அல்லது ரயில் நிலையத்திலிருந்தோ வெளியேற்றப்படலாம் என்று எச்சரித்துள்ள தெற்கு ரயில்வே, மீண்டும் மீண்டும் இத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு ரூ.5,000 வரை அபராதமும், ஆறு மாதங்கள் வரை சிறைத்தண்டனையும் விதிக்கப்பட வாய்ப்புள்ளதாகத் தெரிவித்துள்ளது. மேலும், அபராதம் விதிக்கும் அதிகாரம் ரயிலில் பணியில் இருக்கும் டிக்கெட் பரிசோதகர்கள் மற்றும் வணிகப் பிரிவின் மூத்த அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

சக பயணிகளுக்கு இடையூறு விளைவிப்பவர்களுக்கு அபராதம் விதிக்கவும், அவர்களை ரயில் பெட்டியிலிருந்து வெளியேற்றவும் பொதுவான விதி ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. பொது இடங்களில் செல்போன்கள் மூலம் உரத்த குரலில் பேசுவது, அதிக ஒலியுடன் இசை, உரையாடல்கள் கேட்பது, வீடியோ பார்ப்பது பகிர்வது தற்போது பெருகி வருவதாகவும், இதனால் பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியத்தைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அவசியமாக்கியுள்ளது என்றும் தெற்கு ரயில்வே கூறியுள்ளது.

# வேலை வாய்ப்பு ரயில்வேயில் 1688 காலியிடங்கள்!



அறிவிப்பு எண்: 07/2026 |
பணிப் பிரிவு: மத்திய அரசு வேலை |
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரப் பணி |
மொத்த காலியிடங்கள்: 1,688 NTPC (இளநிலை) பணியிடங்கள் |
பணியிடம்: இந்தியா முழுவதும் |
விண்ணப்பத் தொடக்க நாள்: 15.10.2026 |
விண்ணப்பிக்க கடைசி நாள்: 13.11.2026, இரவு 11:59 மணி
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் |
அதிகாரப்பூர்வ இணையதளம்: rrbapply.gov.in |

# மளிகை பொருட்கள் நுழைய இஸ்ரேல் தடை.. உணவு தர நிதியில்லை என ஐ.நா. கைவிரிப்பு - காசாவில் பசியில் வாடும் 16 லட்சம் மக்கள்!



காசா, அக். 20–

போதிய நிதி இல்லாத காரணத்தால் காசா மக்களுக்கு அளிக்கப்பட்டு வந்த மாதாந்திர உணவு உதவியை நிறுத்தவேண்டிய நிலை ஏற்பட்ட்டுள்ளதாக ஐ.நா. உலக உணவுத் திட்ட மையம் தெரிவித்துள்ளது.

போர் நிறுத்தம் ஏற்பட்டபோதும் காசா மீது இஸ்ரேல் தாக்குதல்கள் தொடர்ந்து வரும் நிலையில் காசா மக்கள் சுமார் 23 லட்சம் பேரில் 14 லட்சம் பேர் உணவில்லாமல் தவித்து வருகின்றனர். இவர்களில் 2 லட்சம் பேரின் நிலை மிக மோசமானதாக உள்ளது. காசாவில் உணவின்றி தவித்து வரும் மக்களுக்கு ஐ.நா.வின் உலக உணவுத் திட்டத்தின் மூலம் உணவளிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் மாதாந்திர உணவு உதவி பெறும் மக்களின் எண்ணிக்கையை 16 லட்சத்தில் இருந்து 11 லட்சமாக குறைக்கவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வழங்கப்படும் உணவின் அளவும் பாதியாகக் குறைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதிய நிதி இல்லாத காரணத்தினால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. போர் அதிகம் பாதித்த இடங்களில் சென்றடைய முடியாத பகுதிகளில் வசிப்போருக்கு இரு நாள்களுக்கு ஒருமுறை மட்டுமே உணவு வழங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனிடையே மேற்கு கரை பகுதியில் அடுத்த 6 மாதங்களுக்கு தேவையான அத்தியாவசிய உதவிகளை வழங்குவதற்கு சுமார் 450 மில்லியன் டாலர் தேவைப்படுவதாகவும் ஐநாவின் உலக உணவுத்திட்ட மையம் தெரிவித்துள்ளது.

மேலும் காசாவிற்குள் இனி மளிகை பொருட்கள் நுழையாது என இஸ்ரேல் கடந்த புதன்கிழமை அறிவித்ததிலிருந்து மாவு, முட்டை மற்றும் வெங்காயம் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளன மளிகை பொருட்களின் இறக்குமதிக்கு இஸ்ரேல் கட்டுப்பாடுகளை விதித்துள்ளதால், காசாவில் உணவு நெருக்கடி தீவிரமடையும் என அச்சம் நிலவுகிறது.

எல்லைகள் மூடப்பட்ட கடந்த இரண்டு மூன்று நாட்களில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் கணிசமாக அதிகரித்துள்ளதால், ஏற்கனவே வறுமையால் அவதிப்படும் குடும்பங்கள் தங்கள் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போராடி வருகின்றன என்று அல்ஜசீரா செய்தி வெளியிட்டுள்ளது. விலைகள் மேலும் உயரக்கூடும் என்ற அச்சத்தில், மக்கள் தங்களுக்குக் கிடைக்கும் உணவுப் பொருட்களை வாங்கிச் சேமித்து வருகின்றனர். இருப்பினும், ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு கூட வாங்க முடியாத பல குடும்பங்களுக்கு, கூடுதலாக உணவுப் பொருட்களை வாங்குவது சாத்தியமற்றதாக உள்ளது. எல்லைக் கடக்கும் இடங்கள் நீண்ட காலத்திற்கு மூடப்பட்டிருந்தால், நிலைமை மேலும் மோசமடையும் என்ற அச்சம் நிலவுகிறது.

# அதிரடியாக குறைந்த தங்கம் விலை!



சென்னை, அக். 20–

தங்கம் விலை அதிரடியாக குறைந்துள்ளது. சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கம் விலை சவரனுக்கு ரூ.640 குறைந்து ரூ.1,07,920–க்கும், ஒரு கிராம் ரூ.80 குறைந்து ரூ.13,490–க்கும் விற்பனையாகிறது. வெள்ளி விலையில் 4–வது நாளாக இன்றும் மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.240–க்கும், ஒரு கிலோ ரூ.2.40 லட்சத்திற்கும் விற்பனையாகிறது.

# பழனியில் அண்ணாமலை பேச்சு!



பழனி, அக். 20–

விரைவில் கட்சி தொடங்கி உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடுவோம் என்று பழனியில் அண்ணாமலை பேசினார். பழனியில் உள்ள சண்முகநதியில், வீ.த.லீடர்ஸ் அமைப்பினர் பல நாட்களாக தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

பணிகள் முடிந்ததும் சண்முக நதியை பொது மக்களிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி விழா நடைபெற்றது. இதற்கு மாவட்ட நிர்வாகி கனகராஜ் தலைமை தாங்கினார். இதில் வீதலீடர்ஸ் அமைப்பின் தலைவர் அண்ணாமலை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசினார். அவர் பேசியதாவது:

வீதலீடர்ஸ் அமைப்பின் சார்பில் பழனி சண்முக நதியில் 600 டன் குப்பைகள் அகற்றப்பட்டுள்ளது. பழனி சண்முக நதியில் கோவில் கழிவுகளும் கலந்துள்ளது. அறநிலையத்துறை உண்டியல் பணத்தை மட்டும் வாங்கி அரசுக்கு கொடுப்பதை தான் செய்கிறது. சண்முக நதியை மேலும் தூய்மைப்படுத்த அரசு நிதி ஒதுக்க வேண்டும். நம் தமிழ்நாட்டில் எப்போது உள்ளாட்சித் தேர்தல் நடந்தாலும் அதில் போட்டியிட தயாராக உள்ளோம். மேலும் விரைவில் கட்சி தொடங்க உள்ளோம். இவ்வாறு அவர் பேசினார். இதில் ஆனந்தகுமார், செந்தில்குமார், நீர்நிலை ஆர்வலர் விமல் ராகவன், ஜான் ஆரோக்கியசாமி, ஸ்ரீதர் ஆயக்குடி பிரகாஷ், பாரத் வித்யா பவன் பள்ளி தாளாளர் குப்புசாமி ஆகியோர் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர். முன்னதாக மரங்கள் நடும் விழாவில் ஒரு மரத்தை வைத்து, தண்ணீர் ஊற்றி தொடங்கி வைத்தார்.

# திருவாடானையில் இலவச இ-சேவை மையம் திறப்பு!



ராமநாதபுரம், அக். 20–

ராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் பொதுமக்கள் அரசின் பல்வேறு சேவைகளை எளிதாகவும் விரைவாகவும் பெற்றுக்கொள்ளும் வகையில் இலவச இ–சேவை மையம் திறக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய மையத்தை சுற்றுச்சூழல் துறை அமைச்சர் டாக்டர் ராஜீவ் ரிப்பன் வெட்டி திறந்து வைத்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தார். இந்த இ–சேவை மையத்தின் மூலம் ஆதார் தொடர்பான சேவைகள், குடும்ப அட்டை தொடர்பான பணிகள், கல்விச் சான்றிதழ்கள், சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட பல்வேறு அரசு ஆவணங்கள் தொடர்பான சேவைகளைப் பொதுமக்கள் எளிதில் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

# பொது கட்டட விதிகளில் மீண்டும் வருகிறது திருத்தம்!



சென்னை , அக். 20–

தமிழகம் முழுதும் அமல்படுத்தும் வகையில், பொது கட்டட விதிகள், 2019ல் அறிவிக்கப்பட்டன. பெருநகர் வளர்ச்சி குழுமம் முதல் உள்ளாட்சி அமைப்புகள் வரை, கட்டட அனுமதியில் சீரான நடைமுறையை கடைப்பிடிக்கும் வகையில், இந்த விதிகள் உருவாக்கப்பட்டன.

கடந்த, 2019ல் அமல்படுத்தப்பட்ட நிலையில், அதில் சில இடங்களில் திருத்தங்கள் தேவைப்பட்டன. அதனால், 2024 வரை, பொது கட்டட விதிகளில், அந்தந்த சமயத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில், திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில், கட்டடங்களின் உயர வரம்பு, பரப்பளவு வரம்பு, கட்டட அனுமதி அதிகார வரம்பு போன்றவற்றில் திருத்தங்கள் தேவைப்படுகின்றன.

இதுகுறித்து, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: மூன்றாவது முழுமை திட்ட வரைவு ஆவணம் தயாரிப்பதற்கான பணி நடந்து வருகிறது. பொது கட்டட விதிகளை திருத்தும் பணிகளை, இரண்டு கட்டங்களாக மேற்கொள்ள முடிவு செய்துள்ளோம். முதல் கட்டத்துக்கான வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கட்டட அனுமதி பணியில் ஏற்படும் பிரச்னைகள் தொடர்பாக, பல்வேறு கோரிக்கைகள் வந்துள்ளன. அதன் அடிப்படையில், தற்போது அதிக உயரமில்லாத பிரிவில் கட்டடத்தின் உயர வரம்பு, 18 மீட்டர் அதாவது, 59 அடியாக உள்ளது. இது, 24 மீட்டர் அதாவது, 78 அடி வரை திருத்தி அமைக்க வாய்ப்புள்ளது. சாதாரண கட்டடங்களுக்கான எப்.எஸ்.ஐ., எனப்படும் தளபரப்பு குறியீடு, 2 மடங்காக உள்ளது. இதில், 50 சதவீதம் வரை உயர்வு வழங்க வாய்ப்புள்ளது. இயல்பு நிலையில், 22 அடி அகல சாலைகள் இருப்பது கட்டாயம்.

அங்கீகாரமில்லாத மனைகள் வரன்முறை செய்யப்பட்ட இடங்களில், 14 அடி, 16 அடி அகல சாலைகள் உள்ளன. இதன் தொடர்பு பகுதிகளில், கட்டட அனுமதி வழங்குவதற்கான சாலை அகலங்கள் வரையறுக்கப்பட உள்ளன. மேலும், கட்டடங்களில் பக்கவாட்டு காலியிடம் விடுவது தொடர்பான விதிகளும் மாற்றப்பட உள்ளன. தொழிலக மற்றும் வணிக கட்டடங்களுக்கு தேவையான மாற்றங்களும் செய்யப்பட உள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

# மனைவி சாக்ஷியை ஏமாற்றிய தோனி!



கிரிக்கெட் வீரர் எம்.எஸ். தோனி, தனது மனைவி சாக்ஷியுடன் விளையாடும் விடியோ சமூக ஊடகங்களில் வைரலாகி வருகிறது. குஜராத்தின் ஜாம்நகரில் தொழிலதிபர் அம்பானி குடும்பத்தின் சார்பில் நவராத்திரி விழா கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் கிரிக்கெட் வீரர் எம்.எஸ். தோனி, இயக்குநர் அட்லீ, கீர்த்தி சனோன், வருண் தவான், டைகர் ஷெராஃப், மௌனி ராய், ஷாகித் கபூர், திஷா பதானி உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

ரிலையன்ஸ் கிரீன்ஸ் டவுன்ஷிப்பில் நடைபெற்ற இந்த விழாவில் எம்.எஸ். தோனியுடன் அவருடைய மனைவி சாக்ஷியும் கலந்துகொண்டு ராட்டினம் உள்ளிட்ட சவாரிகளிலும் விளையாடினர். தொடர்ந்து, விழாவில் பங்கேற்றோருக்கு விருந்தும் அளிக்கப்பட்டது.

விழாவின்போது, தனது மனைவி சாக்ஷிக்கு தோனி ஐஸ் கிரீம் ஊட்டி விடுவதுபோல ஏமாற்றும் விடியோ சமூக ஊடகங்களில் வைரலாகி வருகிறது. காதல் தம்பதியான தோனி – சாக்ஷியின் இந்த விடியோவை சமூக ஊடகங்களில் பலரும் பகிர்ந்து வருகின்றனர்.

# உடற்கல்வி பாடவேளையில் நடக்குது ‘சடுகுடு’!



மதுரை, அக். 20–

பள்ளி மாணவர்கள் நலன் கருதி அதிகரிக்கப்பட்ட உடற்கல்வி பாடவேளைகள் அமலுக்கு வந்த நிலையில் அதற்கு தேவையான உடற்கல்வி ஆசிரியர்களை நியமிக்க கல்வித்துறை நடவடிக்கை எடுக்காதது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மாணவர்களுக்கு படிப்புடன் விளையாட்டும் முக்கியம் என்ற அடிப்படையில் அக்.13ல் நடந்த கல்வி அதிகாரிகள் ஆய்வுக் கூட்டத்தில் பள்ளிகளில் உடற்கல்வி பாட வகுப்புகள் அதிகரிக்கப்படும் என அமைச்சர் ராஜ்மோகன் அறிவித்தார். அதன்படி அதிகரிக்கப்பட்ட பாட வகுப்புகளுக்கான அட்டவணையும் அமலுக்கு வந்துள்ளது.

புதிய அட்டவணைப்படி வாரத்தில் 6 – 12ம் வகுப்புக்கு மூன்றும், 1 – 5ம் வகுப்புக்கு ஐந்து நாட்களும் உடற்கல்வி பாடவேளைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஆனால் அதற்கு ஏற்ப உடற்கல்வி ஆசிரியர் எண்ணிக்கையில் மாற்றம் செய்யவில்லை. மாநில அளவில் 6 ஆயிரம் பணியிடங்கள் காலியாக உள்ளதாகவும், 8,500 நடுநிலைப் பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியரே இல்லை என்பது தான் கல்வித்துறை நிலைமை. இதனால் உடற்கல்வி பாடவேளைகளை அதிகரித்தாலும் பயனில்லை என்பது தலைமையாசிரியர்களின் ஆதங்கம்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




## முதலீட்டுச் செலவுகளை மேற்கொள்ளமால் அரசு திணறுவதால் கடன் தேவை குறைவு: தங்கம் தென்னரசு!



சென்னை, அக். 20–

2026 – 27 நிதியாண்டின் முதல் அரையாண்டில் (ஏப்ரல் – செப்டம்பர்) வளர்ச்சித் திட்டங்களுக்காகக் கடன் வாங்கும் விகிதத்தை தமிழ்நாடு அரசு 21 சதவிகிதம் குறைத்துள்ளதாக செய்திகள் வெளியாகின.

இது குறித்து தங்கம் தென்னரசு தன்னுடைய எக்ஸ் தளப் பதிவில் தெரிவித்திருப்பதாவது:

''கடந்த நிதியாண்டின் முதல் அரையாண்டுடன் ஒப்பிடுகையில், நடப்பு நிதியாண்டின் முதல் அரையாண்டில் தமிழ்நாடு அரசு, மாநில அரசுப் பத்திரங்கள் மூலம் திரட்டிய கடன் 21% குறைந்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால், குறைந்த அளவு கடன் வாங்கியுள்ளதாகச் சொல்லி அதனை ஒரு சாதனையாக முன்னிறுத்த முயற்சிக்கும் தவெக அரசு, எவ்வாறு இந்த கடன் தேவை குறைந்தது என்பதையும், இந்த முதல் அரையாண்டில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சிப் பணிகளையும் மூலதனச் செலவையும் வெளியிட வேண்டாமா?

திமுக ஆட்சியின் கடந்த 202526 நிதிநிலை அறிக்கையில் மூலதனச் செலவினங்களுக்கு ரூ. 57,231 கோடி ஒதுக்கப்பட்டது. அதில் சிஏஜி–இன் தற்காலிக மாதாந்திரக் கணக்குகளின்படி, 2025 ஏப்ரல்செப்டம்பர் காலத்தில் ரூ. 13,002.22 கோடி அளவிற்கு மெட்ரோ ரயில் உள்ளிட்ட திட்டங்களுக்கான மூலதனச் செலவு மேற்கொள்ளப்பட்டது.

தவெக அரசு, இந்த நிதி ஆண்டில் மூலதன செலவுகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதியில், அதே ஏப்ரல்– செப்டம்பர் மாத காலகட்டத்தில் மேற்கொண்ட மூலதனச் செலவு எவ்வளவு? புதிய உள்கட்டமைப்புத் திட்டங்களுக்குச் செலவிட்டது எவ்வளவு? திமுக ஆட்சியில் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப்பணிகளுக்கு இன்னும் தவெக அரசால் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள தொகை எவ்வளவு? இந்த விவரங்களை எல்லாம் அரசு வெளியிடுமா? வளர்ச்சிப் பணிகளைத் தாமதப்படுத்தியும், செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கான தொகைகளை வழங்காமலும், பண இருப்பை அதிகமாகக் காட்டி, குறைந்த அளவே கடன் வாங்கிவிட்டு, அதனை நிதி மேலாண்மையின் சாதனையாகக் கூற முடியுமா? வழங்க வேண்டிய தொகைகளை நிலுவையில் வைத்திருப்பது சேமிப்பாகிவிடுமா?

முதல் அரையாண்டில் கடன் குறைந்ததாகக் கூறும் தவெக அரசு, அக்டோபர்டிசம்பர் காலாண்டில் மட்டும் ரூ. 48,000 கோடி கடன் பெறத் திட்டமிட்டுள்ளது. இது முந்தைய காலாண்டில் திரட்டிய ரூ.23,500 கோடியைவிட இரு மடங்குக்கும் அதிகமல்லவா?

த.வெ.க. அரசின் வரவு செலவுத் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டதை விட, குறைந்த அளவிலேயே அரசின் வருவாய் இருந்து வரும் நிலையில், முதலீட்டுச் செலவுகளை மேற்கொள்ள முடியாமல் இந்த அரசு திணறுவதால் மட்டுமே கடன் தேவை குறைந்துள்ளது.

பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்பிலான ஒப்பந்த புள்ளிகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளாதால் சாலைகள் மோசமாக உள்ளன. கட்டடப் பணிகள் பாதியில் நிற்கின்றன. ஆயிரக்கணக்கானவர்கள் வேலை இழந்து நிற்கின்றனர்.

எனவே, இதனை தங்களின் சாதனை எனச் சொல்லி மக்களை ஏமாற்றுவதை விட்டுவிட்டு, மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவு, செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு இன்னும் விடுவிக்கப்படாமல் வைக்கப்பட்டுள்ள நிலுவைத் தொகை ஆகியவற்றின் முழு விவரங்களையும் வெளியிட்டு, தவெக அரசு மக்களுக்குப் பதிலளிக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஒட்டன்சத்திரத்தில் ஆயுத பூஜை கோலாகலம்!



ஒட்டன்சத்திரம்: அக். 20–

தமிழகம் முழுவதும் ஆயுத பூஜை விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வரும் நிலையில், திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் அவசர காலங்களில் தங்களது உயிரையும் பொருட்படுத்தாமல் பிறர் உயிரைக் காப்பாற்றும் ஆம்புலன்ஸ் ஓட்டுநர்கள் ஆயுத பூஜையை உற்சாகமாகக் கொண்டாடினர்.

ஆயுத பூஜையை முன்னிட்டு ஆம்புலன்ஸ் வாகனங்களைத் தூய்மையாகக் கழுவி, சந்தனம், குங்குமம் இட்டு, மலர் மாலைகள் அணிவித்து அலங்கரித்தனர். தொடர்ந்து, பெயில்நாயக்கன்பட்டி ஸ்ரீ சுயம்பு மகாகாளியம்மன் கோவிலில் சிறப்பு பூஜைகள் செய்து வழிபட்டனர்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்குப் பொறிகடலை, சுண்டல், பொங்கல் மற்றும் பழங்கள் வழங்கப்பட்டன.

அவசர காலங்களில் நோயாளிகளை உரிய நேரத்தில் மருத்துவமனைக்குக் கொண்டு சேர்த்து, பல உயிர்களைக் காப்பாற்றும் ஆம்புலன்ஸ் ஓட்டுநர்கள், தங்களது வாகனங்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ஆயுத பூஜையைக் கொண்டாடியது நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

## கீழக்கரை நகராட்சியில் நான்கு வகை குப்பைகள் தரம் பிரித்தல் பொதுமக்களுக்கு நகராட்சி ஆணையாளர் வேண்டுகோள்!





மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சிவகுரு பிரபாகரன்



கீழக்கரை ஆணையாளர் கிருஷ்ணவேணி

கீழக்கரை, அக். 20–

கீழக்கரை நகராட்சிப் பகுதியில் தூய்மையான நகரத்தை உருவாக்கும் நோக்கில், திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, பொதுமக்கள் தங்கள் வீடுகளில் உருவாகும் குப்பைகளை நான்கு வகைகளாகத் தரம் பிரித்து நகராட்சி தூய்மைப் பணியாளர்களிடம் வழங்குமாறு நகராட்சி ஆணையாளர் திருமதி கிருஷ்ணவேணி அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

பொதுமக்கள் குப்பைகளைப் பின்வரும் நான்கு வகைகளாகப் பிரித்து வழங்க வேண்டும்: 1. ஈரக் கழிவு சமையலறை கழிவுகள், பழம் காய்கறி தோல்கள், உணவுக் கழிவுகள், இலைகள், மலர்கள் போன்ற மக்கும் கழிவுகள். 2. உலர் கழிவு: காகிதம், கார்ட்போர்டு பிளாஸ்டிக் பாட்டில்கள், டின் கேன்கள் அட்டைகள், செய்தித்தாள்கள் போன்றவை. 3. சுகாதார கழிவுகள்: மாதவிடாய் துணிகள், டயப்பர்கள், பயன்படுத்திய திசு, மாஸ்க்கள் 4. சிறப்புக் கழிவுகள்: மின்னணு சாதனங்கள், பேட்டரிகள், மின் விளக்குகள், உடைந்த கண்ணாடி பொதுமக்கள் மேற்கண்ட நான்கு வகைக் கழிவுகளையும் தனித்தனியாகப் பிரித்து, வீடுகளுக்கு வரும் நகராட்சி தூய்மைப் பணியாளர்களிடம் வழங்க வேண்டும். அனைத்துக் கழிவுகளையும் ஒன்றாகக் கலந்து வழங்குவதைத் தவிர்க்க வேண்டும். மேலும், குப்பைகளை வீதிகள், காலியிடங்கள் மற்றும் பொது இடங்களில் கொட்டாமல், நகராட்சியின் வீடு தோறும் குப்பை சேகரிக்கும் பணியாளர்களிடம் முறையாக வழங்க வேண்டும். குப்பைகளை முறையாகத் தரம் பிரிப்பதன் மூலம் மறுசுழற்சி மற்றும் உரம் தயாரித்தல் போன்ற செயல்பாடுகளை மேம்படுத்தி, சுற்றுச்சூழலைப் பாதுகாக்க முடியும். நகராட்சி ஆணையாளர் திருமதி கிருஷ்ணவேணி அவர்கள் வேண்டுகோள்: கீழக்கரை நகரைத் தூய்மையான நகரமாக மாற்றுவதற்கும், குப்பைகள் கொட்டப்படாத நகராட்சியாக உருவாக்குவதற்கும் பொதுமக்களின் முழுமையான ஒத்துழைப்பு அவசியம். எனவே, ஒவ்வொரு வீட்டிலும் நான்கு வகைக் குப்பைகளைத் தனித்தனியாகப் பிரித்து வழங்குவதைப் பழக்கமாகக் கொள்ள வேண்டும். நகரின் சுகாதாரத்தையும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்கும் இப்பணியில் அனைத்து பொதுமக்களும் பொறுப்புணர்வுடன் பங்கேற்று நகராட்சிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பொதுமக்களின் ஒத்துழைப்பே தூய்மையான கீழக்கரைக்கு அடிப்படை!

## அமைதிப்பேச்சில் புதின்? ரஷியா உடன் இவ்வளவு நெருக்கமாகப் பணியாற்றியது இல்லை! - ஈரான்!




ஈரான், அக். 20–

ஈரானின் அணுஆயுதத் திட்டத்தை எதிர்த்து அந்நாட்டின் மீது அமெரிக்க படைகள் கடந்த பிப். 28 ஆம் தேதி முதல் போர் தொடுத்துள்ளன. ஆனால், இந்தப் போரில் தற்போது ஹோர்முஸ் நீரிணையைக் கைப்பற்றுவதில் அமெரிக்கா மும்முரம் காட்டி வருகின்றது. அமெரிக்காவுக்கு எதிராக வளைகுடா நாடுகளைக் குறிவை த்து ஈரானிய படைகள் பதில் தாக்குதல் நடத்தி வருவதால் வளைகுடா பகுதி முழுவதும் பதற்றமான சூழல் நிலவி வருகின்றது. மேலும், இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக இருதரப்புக்கும் இடையே மத்தியஸ்தம் செய்யும் முயற்சிகளை ரஷிய அரசு மேற்கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில், ஈரானுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ள ரஷிய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோ உடன் ஈரானிய வெளியுறவு அமைச்சர் அராக்சி கடந்த திங்களன்று (அக். 20) முக்கிய பேச்சுவார்த்தைகளை நடத்தினார். இந்தச் சந்திப்பு குறித்து ஈரானிய அமைச்சர் வெளியிட்டுள்ள பதிவில், “நாங்கள் ஐரோப்பா முதல் மேற்கு ஆசியா வரை, லெபனான், பாலஸ்தீனம், உக்ரைன் மற்றும் யேமன் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளையும் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினோம். மேலும், பொருளாதார மற்றும் அணுசக்தி ஒத்துழைப்பின் விரிவாக்கம் குறித்தும் கவனம் செலுத்தினோம்.

வரலாற்றில் இதற்கு முன்பு ஈரான் மற்றும் ரஷியா இவ்வளவு நெருக்கமாகப் பணியாற்றியதில்லை'' எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, ஈரான் மற்றும் அமெரிக்கா இடையில் மத்தியஸ்தம் செய்வதற்குத் தயாராக இருப்பதாக ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் ஈரானிய அதிபர் மசூத் பெஷேஷ்கியனிடம் தெரிவித்திருந்ததைத் தொடர்ந்து, அமைச்சர் லாவ்ரோவின் ஈரான் பயணம் அமைந்துள்ளது சர்வதேச அளவில் கவனம் பெற்று வருகிறது. இதன்மூலம், ஈரான் மற்றும் அமெரிக்கா இடையேயான போர்நிறுத்தப் பேச்சுவார்த்தைகளில் ரஷிய அதிபர் புதின் நேரடியாகத் தலையீடக் கூடும் என எதிர்பார்க்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## சிவகங்கையில் 31-ந்தேதி வரை 144 தடை உத்தரவு அமல்!




சிவகங்கை, அக். 20–

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் வருகிற 24–ந்தேதி மாமன்னர் மருதுபாண்டியரின் நினைவு தின நிகழ்ச்சி அரசு சார்பில் நடைபெற உள்ளது. மேலும் வருகிற 27–ந்தேதி காளையார்கோவிலில் சமுதாய மக்கள் சார்பில் மாமன்னர் மருதுபாண்டியர்களின் நினைவு தின நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இதைத்தொடர்ந்து வருகிற 30–ந்தேதி ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் முத்துராமலிங்கத்தேவரின் குருபூஜை விழா நடை பெற உள்ளது. இதில் பங்கேற்ற தமிழகம் முழுவதும் இருந்து ஏராளமான மக்கள் வருவார்கள்.

இதை தொடர்ந்து சட்டம்–ஒழுங்கை பாதுகாப்பதற்காக சிவகங்கை மாவட்டம் முழுவதும் இன்று முதல் 31–ந்தேதி வரை பி.என்.எஸ்.எஸ். தடைச்சட்டம் 163 (1) கீழ் (பழைய சட்டப்படி 144) தடை உத்தரவு பிறப்பித்து மாவட்ட கலெக்டர் ஆகாஷ் உத்தரவிட்டார்.

## கட்சி தாவியதற்கு நிலம் வெகுமதி?.. யூசுப் பதானின் 14 ஆண்டுகால ஆசையை நிறைவேற்றிய குஜராத் அரசு!






புதுடெல்லி, அக். 20–

திரிணாமுல் காங்கிரசை விட்டு வெளியேறிய 2 மாதத்தில் எம்.பி யூசுப் பதானுக்கு குஜராத் அரசு இலவசமாக நிலம் வழங்கியுள்ளது.

குஜராத்தை சேர்ந்த முன்னாள் கிரிக்கெட் வீரர் யூசுப் பதான் ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் 7 ஆண்டுகள் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு விளையாடினார். அப்போது 2 முறை அந்த அணி சாம்பியன் பட்டம் வென்றது. இதனால் மேற்கு வங்கத்தில் யூசுப் பதானுக்கு அதிகமான ரசிகர்கள் உள்ளனர்.

எனவேதான் வெளிமாநிலத்தை சேர்ந்தவர் என்றாலும் யூசுப் பதானை 2025 மக்களவை தேர்தலில் மேற்கு வங்க மாநிலம் பஹராம்பூர் தொகுதியில் திரிணாமுல் காங்கிரஸ் சார்பில் களமிறக்கி மம்தா பானர்ஜி வெற்றி பெற வைத்தார்.

ஆனால் இவ்வாண்டு மேற்கு வங்க சட்டமன்ற தேர்தலில் திரிணாமுல் காங்கிரஸ் பாஜவிடம் தோற்ற பின் அக்கட்சியில் இருந்து விலகி 20 கிளர்ச்சி எம்.பிக்களுடன் என்சிபிஜ என்ற பிராந்திய கட்சியில் இணைந்து பாஜகவின் என்டிஏ கூட்டணிக்கு ஆதரவளித்தார்.

திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜியின் நம்பிக்கைக்குரியவராக இருந்த பதான் இவ்வாறு கட்சி தாவியது பெரும் விமர்சனத்தை ஏற்படுத்தியது.

இந்நிலையில் பாஜக ஆளும் குஜராத் மாநிலத்தில் அவருக்கு நிலம் ஒன்று குஜராத் அரசால் பரிசாக வழங்கிப்பட்டுள்ளது.

இந்த பிளாட்டை கைப்பற்ற யூசுப்பதான் 14 ஆண்டுகளாக போராடிய நிலையில் மம்தா பானர்ஜியின் கட்சியை விட்டு வெளியேறிய 2 மாதத்திலேயே அதை இலவசமாக வழங்க குஜராத் பாஜக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

யூசுப் பதான் தனது சகோதரரும், முன்னாள் கிரிக்கெட் வீரருமான இர்பான் பதான் மற்றும் குடும்பத்தினருடன் குஜராத்மாநிலம் வதோதராவில் உள்ள தாண்டல்ஜா பகுதியில் வசித்து வருகிறார். இவரது பங்களாவையொட்டி வதோதரா மாநகராட்சிக்கு சொந்தமான 978 சதுர மீட்டர் நிலம் உள்ளது.

வீட்டின் அருகே காலியிடம் இருப்பது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளதாக கூறி இந்த நிலத்தை பொது ஏலமின்றி 99 ஆண்டுகள் குத்தகைக்கு தனக்கு வழங்கும்படி யூசுப்பதான் கடந்த 2012ஆம் ஆண்டு வதோதரா மாநகராட்சியை அணுகினார். ஆனால் வதோதரா மாநகராட்சி கொடுக்க மறுத்தது.

இதனை எதிர்த்து யூசுப் பதான் குஜராத் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் கடந்த ஆகஸ்ட் 13ஆம் தேதி நிலத்தை யூசுப் பதானுக்கு வழங்க குஜராத் பாஜக அரசு ஒப்புதல் வழங்கியது.

முன்னதாக கடந்த ஜூலை மாதம் இந்த நிலத்தை மாநகராட்சியின் நிலைக்குழு பொது ஏலம் விட முடிவெடுத்தது. மொத்த நிலத்தின் மதிப்பு ரூ.20.5 கோடியாக நிர்ணயிக்கப்பட்டது.

ஆனால் அது கைவிடப்பட்ட நிலையில் தற்போது யூசுப் பதானுக்கு பாதி இடம் இலவசமாகவும், மீதமுள்ள இடம் 50 சதவீத தள்ளுபடி விலையிலும் வழங்கப்பட உள்ளது. இதுதொடர்பான விவரங்கள் வதோதரா மாநகராட்சிக்கு ஆகஸ்ட் 29ஆம் தேதி அனுப்பி வைக்கப்பட்டது. இதையடுத்து யூசுப் பதான் தனது வழக்கை வாபஸ் பெற்றார். இது மம்தா பானர்ஜியை கைவிட்டு பாஜக பக்கம் பதான் சாய்ந்ததற்கு வழங்கப்பட்ட வெகுமதி என்றே விமர்சனங்கள் எழுந்துள்ளன.



இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஊராட்சி ஒன்றியம், ஏர்வாடி கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

## இந்திராசுந்தரம் தொண்டு நிறுவனம் சார்பில் விழா!



திருப்பூர், அக். 20–

திருப்பூரில் இந்திராசுந்தரம் தொண்டு நிறுவனம் மூலமாக தமிழகத்தில் உள்ள பல்வேறு பகுதிகளில் அவர்கள் இடத்திற்கு நேரடியாக சென்று உதவி செய்யும் திருமதி இந்திராசுந்தரம் அவர்கள் தனது வளர்ப்பு பேத்திகளாக வளர்த்து வரும் தேஜாஸ்ரீ தேவ ஸ்ரீ ஆகியஇருதிருச்செல்விகளுக்கும் திருப்பூர் காலேஜ் ரோட்டில் உள்ள தனியார் திருமண மஹாலில் 50க்கும் மேற்பட்ட சீர் வரிசைகளுடன் புப்புனித நீராட்டு விழா செய்தது அனைவரின் பாராட்டை பெற்றது. மேலும் அவர்களின் கல்வி தேவைக்காக இன்சூரன்ஸ் மூலமாக வருடம் ஒரு லட்சம் ரூபாய் கட்டி ஐந்து வருடங்களுக்கு அவர்கள் அந்த தொகையை கட்டி அவர்களது கல்லூரி படிப்பு முதல் திருமண வாழ்க்கை வரை முன்னின்று நடத்துவதென தெரிவித்துள்ளார் மேலும் இந்த பூப்புனித நீராட்டு விழாவிற்கு தனது நண்பர்கள் 500க்கும் மேற்பட்டோர் அழைத்து பிரம்மாண்டமான விழா செய்து அனைவருக்கும் அறுசுவை உணவு விருந்து அளித்து ஆச்சரியப்பட வைத்துள்ளார் திருமதி இந்திரா சுந்தரம் அவர்கள் இவரது இந்த செயல் பொதுமக்கள் பாராட்டி வருகிறார்கள் மேலும் இதில் சிறப்பு விருந்தினராக திரைப்பட நடிகர் அருண் ராஜன்.திவ்யா கலந்து கொண்டு சிறப்பித்தனர் இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை அனைத்தையும் செயலாளர் ராஜா முகம்மது ஏற்பாடு செய்திருந்தார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020